| O.S.No. 208/2024 | PW1: திருமதி. தானம்மாள்<br>க/பெ. திரு. செல்லப்பிள்ளை | 13-08-2025 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1. செல்லப்பிள்ளை என் கணவர். அவர் எப்போது இறந்தார் என்று எனக்கு தெரியாது. எனக்கு 2 பிள்ளைகள். 2-ம் வாதி சந்தோஷ்குமார் மற்றும் இறந்துபோன சண்முகம் எனது பிள்ளைகள் ஆகும். எந்த சொத்திற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் வீட்டிற்காகத்தான் தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்து ஆதியில் அன்னுபிள்ளைக்கு சொந்தமான சொத்தாகும். எல்லப்பிள்ளை, பெருமாள் பிள்ளை, சாமிநாத பிள்ளை, செல்லப்பிள்ளை ஆகியோர் அன்னுப்பிள்ளையின் வாரிசுகள் ஆவார்கள். அன்னுப்பிள்ளை விட்டுச்சென்ற சொத்தினை மேற்படி 4 பேரும் பிரித்துக்கொண்டனர். அவ்வாறு பிரித்துக்கொண்டு அவரவர்கள் பாக சொத்தினை அவரவர்கள் தனித்தனியே அனுபவித்து வந்தனர்.

2. பெருமாள் பிள்ளை, எல்லப்பிள்ளை பாக சொத்தில் ஒரு தட்டோடு வீடு இருந்தது என்றால் சரிதான். பெருமாள் பிள்ளை, எல்லப்பிள்ளை மற்றும் சாமிநாத பிள்ளைக்கு பாகமாக வந்த சொத்தினை எனது மூத்த மகன் சண்முகத்திற்கு கிரையம் செய்து கொடுத்தனர் என்றால் சரிதான். எனது பெரிய மகன் சண்முகம் பிறந்து 20 ஆண்டுகள் கழித்து எனது 2வது மகனான 2-ம் வாதி பிறந்தார் என்றால் சரிதான். எனது கணவர் உயிரோடு இருக்கும் வரையில் குடும்ப நிர்வாகத்தினை அவர்தான் பார்த்து வந்தார். எனது மூத்த மகன் சண்முகம் பால் வியாபாரம் செய்து வந்தார் என்றால் சரிதான். எனது மூத்த மகன் சண்முகம் பால் வியாபாரம் செய்து வந்த வருமானத்தில்தான் குடும்பம் பார்த்து வந்தோம் என்றால்

இல்லை, நாங்கள் ஆடு, மாடு வைத்திருந்தோம், அதன்மூலம் வருமானம் வந்தது.

3. எனது மகன் சண்முகம் பால் வியாபாரத்தில் போதிய வருமானம் இல்லை என்பதால் பிழைப்புக்காக பாண்டிச்சேரி சென்றார் என்றால் சரிதான். பாண்டிச்சேரியில் உள்ள ஆரியபவன் ஹோட்டலில் சர்வராக என் மகன் பணி செய்து வந்தார் என்றால் சரிதான். என் மகன் சர்வராக பணி செய்து வந்து படிப்படியாக உயர்ந்து ஆரியபவன் ஹோட்டலின் மேலாளராக பணி செய்தார் என்றால் சரிதான். பிறகு, அதே ஹோட்டலை என் மகன் லீசுக்கு எடுத்து நடத்தினார்.

4. 2-ம் வாதியை எனது மூத்த மகன் சண்முகம்தான் படிக்க வைத்தார் என்று சொன்னால் சரியல்ல, நான்தான் 2-ம் வாதியை படிக்க வைத்தேன். எனது மகனான 2-ம் வாதிக்கு அவர் வெளிநாடு செல்வதற்கு முன்பாக எவ்வித வருமானமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எந்த ஆண்டு 2-ம் வாதி வெளிநாடு சென்றார் என்று எனக்கு தெரியாது. எனது பெரிய மகன் சண்முகம் ஹோட்டலில் பணி செய்து எல்லப்பிள்ளை, பெருமாள் பிள்ளை, சாமிநாத பிள்ளை ஆகியோர்களது பாக சொத்தினை கிரையம் வாங்கினார் என்று சொன்னால் சரியல்ல.

5. ஆடு, மாடுகளை விற்பனை செய்வதற்கு ஆதாரம் ஏதேனும் உள்ளதா என்றால் அதற்கெல்லாம் ஆதாரம் இல்லை. என் மகனுக்கு கிரையம் கொடுத்த எல்லப்பிள்ளை, சாமிநாத பிள்ளை, பெருமாள் பிள்ளை ஆகியோர் உயிரோடு இல்லை, அவர்களது வாரிசுகள் இருக்கிறார்கள். அவர்களின் வாரிசுகளை விசாரித்தால் சொத்து வாங்கிய விஷயம் தெரியவரும் என்றால் சரிதான். கொல்லுமோடு, பம்பு செட் ஆகியவற்றை விற்பனை செய்தோம். எத்தனை ஏக்கர் நிலத்தினை விற்பனை

செய்தீர்கள் என்றால் அது எனக்கு தெரியாது. என் கணவர் உயிருடன் இருந்தபோதே சொத்துக்களை விற்பனை செய்துவிட்டோம்.

6. எல்லப்பிள்ளை, சாமிநாத பிள்ளை, பெருமாள் பிள்ளை ஆகியோரிடம் என் மகன் சண்முகம் கிரையம் வாங்கும்போது என் கணவர் உயிருடன்தான் இருந்தார். அந்த கிரையப்பத்திரம் என் கணவர் பெயரில் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான், மகன் பெயரில் இருக்கவேண்டும் என்பதற்காக என் கணவர் பெயரில் பதிவு செய்யவில்லை. சொத்தினை எனது மச்சினர் மூத்தாருக்கு ரூ.3,000/-த்துக்கு கிரையம் கொடுத்தோம், எந்த ஆண்டு என்று தெரியாது.

7. சொத்தினை விற்று சுமார் 5 வருடம் கழித்து தாவா சொத்துக்களை கிரையம் வாங்கினோம். பக்கத்தில் இருந்த மனையையும் சேர்த்து கிரையம் வாங்கினோம். தட்டோடு வீட்டினை இடித்துவிட்டு சண்முகம் அதில் வீடு கட்டினார் என்றால் சரிதான், அதற்கு 2-ம் வாதியும் வெளிநாட்டில் வேலை செய்து பணம் கொடுத்தார். 2-ம் வாதி பணம் அனுப்பியதற்கு ஆவணம் ஏதேனும் போட்டுள்ளீர்களா என்றால் இல்லை. அந்த மெத்தை வீடு கட்டி சுமார் 4, 5 வருடங்கள் இருக்கும். அந்த மெத்தை வீடு கட்டி சுமார் 15 ஆண்டுகள் இருக்கும் என்றால் அது எனக்கு தெரியாது. அந்த வீட்டிற்கு மின் இணைப்பு, வீட்டு வரி ஆகியவை எனது பெரிய மகன் சண்முகம் பெயரில்தான் உள்ளது. 15 ஆண்டுகளாக அந்த வீட்டில் சண்முகமும், அவரது வாரிசுகளும்தான் வசித்து வந்தனர் என்றால் சரிதான்.

8. 2-ம் வாதி வெளிநாட்டில் 7 வருடங்களாக வேலை செய்தார். 2-ம் வாதி 7 வருடங்களாக வெளிநாட்டில் வேலை செய்து எனக்கு பணம் அனுப்பினார் என்ற விஷயத்தினை 2-ம் வாதியும் சொல்லியுள்ளார், எனது

பெரிய மகன் சண்முகமும் சொல்லியுள்ளார். பணம் எதற்காக அனுப்பினார் என்று 2-ம் வாதி சொல்லுவாரா என்றால் அவர் எதுவும் சொல்லமாட்டார், எனது பெரிய மகன் சண்முகம்தான் சொல்வார். சண்முகம் பக்கத்து மனையை விற்பனை செய்துவிட்ட பிறகுதான் அவர் விற்பனை செய்ததே எனக்கு தெரியும்.

9. சண்முகம் பெயரில் கிரையம் வாங்கிய சொத்தைத்தான் சண்முகம் விற்பனை செய்தார் என்றால் சரிதான், பொதுவில் நாங்களும் ஆடு, மாடுகள் மூலம் வந்த வருமானத்தையும் கொடுத்தோம். சண்முகம் அந்த இடத்தினை அவரது மகள் திருமணத்திற்காக இறப்பதற்கு 4 மாதத்திற்கு முன்னர் விற்பனை செய்தார். சண்முகம் கிரையம் செய்த கிரைய பத்திரத்தில் நானோ, 2-ம் வாதியோ கையெழுத்து போடவில்லை. விற்பனை செய்த சொத்து சம்மந்தமாக வழக்கு ஏதேனும் தாக்கல் செய்தீர்களா என்றால் இல்லை.

10. சண்முகம் கிரையம் செய்த சொத்து குறித்து திருவண்ணாமலை கலெக்டர் ஆபிசில் ஆட்சேபணை செய்தோம். அந்த சமயம் சண்முகம் இறந்துவிட்டார். கலெக்டர் ஆபிசில் என்னையும் சண்முகத்தின் மனைவியையும் அழைத்து விசாரித்தார்கள், அதற்கு சண்முகம் மனைவி ஒத்துவரவில்லை. சண்முகம் விற்பனை செய்த சொத்தினையும் சேர்த்துதான் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளோம். ஏற்கனவே 2022-ல் சண்முகம் உயிருடன் இருந்தபோது சொத்தில் பங்குவேண்டும் என்று சொல்லி வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தீர்களா என்றால் இல்லை. தாவா சொத்து எனது மூத்த மகன் சண்முகம் சுயமாக சம்பாதித்த சொத்து என்றாலும், அந்த சொத்தில் நாங்கள் எவ்வித பாக உரிமையும் கேட்க முடியாது என்றால் சரியல்ல.

11. ஆடு, மாடுகளை விற்று சொத்தினை வாங்குவதற்கு பணம் கொடுத்தோம் என்று பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. மூதாதையர் சொத்தை விற்று அதில் வந்த பணத்தை கொடுத்து வழக்கு சொத்து கிரையம் வாங்கியதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதேபோல், வீடு கட்டுவதற்காக 2-ம் வாதி பணம் கொடுத்தார் என்று சொல்வது பொய் என்றாலும், சண்முகத்தின் வருமானத்தைக்கொண்டுதான் வீடு கட்டப்பட்டது என்றால் சரியல்ல. மூதாதையர் சொத்தை விற்பனை செய்ததற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. எனவே, எனது வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை** : இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2025.08.13 17:21:58 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**